

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் குழுதலைவரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சி தலைவர் ச.கந்தசாமி, இணை தலைவரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன், பவானி சட்டமன்ற உறுப்பினர் கே. சி.கருப்பண்ணன், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வி.செல்வராஜ், திட்டக்குழு உறுப்பினர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எஸ்.வி.பாளையம் கிராமத்தில் ராமமூர்த்தி, கோபி ஆகியோரின் தந்தையும் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவரும், கழக மூத்த முன்னோடியுமான தா.மு.நாராயணசாமி அவர்கள் மறைவெய்தியதை அறிந்து, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன், சங்கராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆறு.கதிரவன், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ந.பன்னீர்செல்வம், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் இரா.செல்வம், பேரூர் கழக செயலாளர் என்.துரைதாகப்பிள்ளை உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று அய்யாவின் உடலுக்கு கழக கொடி போர்த்தி மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

### பஹ்ரைன், குவைத்தில் உள்ள

# அமெரிக்காவின் 85 ராணுவ முகாம்கள் மீது ஈரான் குண்டுவீச்சு!

## வளைகுடா நாடுகளில் போர்ப் பதற்றம் அதிகரிப்பு!

டெஹ்ரான், ஜூலை 10-

அமெரிக்காவின் 85 ராணுவ முகாம்களை ஈரான் தாக்கியதால் வளைகுடா பகுதியில் பெரும் போர் பதற்றம் உருவாகியுள்ளது. வளைகுடா பகுதியில் உள்ள ஹார்முஸ் ஜலசந்தியில் சென்ற வணிக எண்ணெய் கப்பல்கள் மீது கடந்த சில நாட்களுக்கு முன் ட்ரோன் தாக்குதல்கள் நடந்தன. இதற்கு பதிலடியாக, ஈரானில் உள்ள ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் படகுகள், கடலோர ரேடார் தளங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட 85 இலக்குகள் மீது அமெரிக்காவின் சென்ட்காம் எனப்படும் மத்திய கட்டளைப்பிரிவு துல்லியமான ஆயுதங்களை பயன்படுத்தி கடுமையான தாக்குதல்களை நடத்தியது.

இந்த தாக்குதலால், கடந்த ஜூன் 17ம் தேதி அமெரிக்கா ஈரான் இடையே ஏற்படுத்தப்பட்ட தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் முற்றிலுமாக முறிந்தது. அத்துடன், சர்வதேச சந்தையில் ஈரான் கச்சா எண்ணெய் விற்பனை செய்வதற்காக அமெரிக்கா வழங்கியிருந்த பொது உரிமத்தை அதிகாரப்பூர்வமாக ரத்து செய்ததால் உலக அளவில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. இதற்கு முதற்கட்ட பதிலடி கொடுக்கும் வகையில், பஹ்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள 85 அமெரிக்க ராணுவ முகாம்கள் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தியதுடன், அமெரிக்காவின் எம்.கியூ9 ரீப்பர் ரக ட்ரோன் ஒன்றை சுட்டு வீழ்த்தியதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை இன்று அறிவித்துள்ளது.

ஈரானின் கடற்படை மற்றும் விண்வெளி படை இணைந்து நடத்திய இந்த தாக்குதலில், பஹ்ரைனின் சல்மான் துறைமுகம், 5 கடற்படை பிரிவு மற்றும் குவைத்தின் அலி அல் சலீம் விமானப்படை தளம் ஆகிய முக்கிய இடங்கள் குறிவைக்கப்பட்டன. இந்த தாக்குதலின் போது இரு நாடுகளிலும் அபாய எச்சரிக்கை ஒலிகள் எழுப்பப்பட்டதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம், 'இந்த தாக்குதலால் அமெரிக்க தரப்பில் உடனடியாக எந்த உயிரிழப்போ அல்லது ராணுவ தளங்களுக்கு பெரிய அளவிலான கட்டமைப்பு சேதங்களோ ஏற்பட்டதாக அறிக்கை எதுவும் வரவில்லை' என்று தெரிவித்தார். இருப்பினும், தென் ஈரான் வான்பரப்பில் அமெரிக்க ட்ரோனை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்தியதாக ஈரான் அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### ஆலங்குளம் அருகே அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் பயங்கர தீ விபத்து!

# 25,000 நெல் மூட்டைகள் சேதம்! த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கே காரணம்!

## நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பார்வையிட்டு - குற்றச்சாட்டு!



தென்காசி, ஜூலை 10-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டதில் சுமார் 25,000,ம் நெல் மூட்டைகள் சேதமடைந்தது. பாதிக்கப்பட்ட நெல்கொள்முதல் நிலையத்தை நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் மற்றும் கழக நிர்வாகி கள் பார்வையிட்ட னர்.த.வெ.க. அரசு முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாததே இந்த விபத்து க்கு காரணம். என தெரிவித்தார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே ஐந்தாம் கட்டளையில் நெல் மூட்டைகள் இங்கு கொண்டுவரப்பட்டு இருப்பு வைக்கப்படும் இவை அனைத்தும் ரைஸ் மில்லுக்கு கொண்டு சென்று அரவை செய்த பிறகு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிற்கு அனுப்பி வைக்கப்படும்.தற்போது அங்கு சுமார் 27,000 நெல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அன்று (07.07.2026 ) திடீரென தீப்பற்றியது. இதில் சுமார் 25,000 நெல் மூட்டைகள் தீயில் எரிந்தது.

இது பற்றிய தகவல் அறிந்ததும் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் தீ விபத்துக்குள்ளான நெல் கொள்முதல் நிலையத்தை பார்வையிட்டு விபத்து குறித்து அங்கு பணியில் இருந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே ஐந்தாம் கட்டளையில் தமிழக அரசின் நெல் கொள்முதல் நிலையம் அமைந்துள்ளது.இங்கு ஆயிரக்கணக் கான விவசாயிகள் தங்களது நெல்லை விற்பனை செய்துள்ளனர். இங்கு தீ விபத்து ஏற்பட்டதை கேள்விப்பட்டு சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்டோம். மேலும் இரவு நேரத்தில் மர்ம நபர்கள் தீ வைத்ததாக அங்கு இருப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் சுமார் 25,000 நெல் மூடைகள் சேதமடைந்துள்ளது. லட்சக்கணக்கில் மூட்டைகள் வைக்கப்படக்கூடிய இந்த இடம் ஒரு பாதுகாப்பற்ற பகுதியாக உள்ளது. சி.சி.டி.வி. கேமரா உள்ளிட்டபோதிய பாதுகாப்பு வசதிகள் இல்லை. இந்த விபத்திற்கு த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கே காரணம் என அவர் தெரிவித்தார்.

அப்போது மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், பொதுக்குழு உறுப்பினர் வி.வி.ரவிச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன், ஒன்றிய செயலாளர் சிவக்குமார்,ஒன்றிய நிர்வாகி சேர்மச்செல்வன் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஆலங்குளம் அருகே சிறந்தவெளி சேமிப்பு கிட்டங்கியில் 9 வது அடுக்கில் தீ விபத்து ஏற்பட்டது.தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இதனால் எரியாத பல்லாயிரக்கணக்கான நெல் மூடைகளும் அதிக அளவில் தண்ணீரில் நனைந்தன. இவ்வாறு நனைந்த நெல்லை மீண்டும் பயன்படுத்த முடியுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. அத்துடன் நனைந்த நெல்மணிகள் அனைத்தும் முளைத்து விடும் அபாயமும் இருப்பதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

விவசாயின் மீது அக்கறை கொண்ட அரசாக திமு.க அரசு செயற்பட்டதன் காரணமாக நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் மற்றும் கழக நிர்வாகி கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டது, குறிப்பிடத்தக்கதாகும்.

### பரமத்தி வேலூரில் - போதை மாத்திரை விற்பனை அதிகரிப்பு!

நாமக்கல், ஜூலை 10-

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் மற்றும் பொத்தனூர் காவிரி கரையோரப் பகுதிகளில், கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களைக் குறிவைத்து போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட தனிப்படையினர் நடத்திய தீவிர கண்காணிப்பில், பொத்தனூரைச் சேர்ந்த கோகுல் (22) என்பவர் 10 போதை மாத்திரைகளுடன் முதலில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில், தலைமறைவாக இருந்த உள்ளூர் ஏஜென்ட் அரவிந்த் (21) என்பவரை போலீசார் கைது செய்து விசாரித்தனர்.

அப்போது, ஈரோடு பகுதியில் இருந்து போதை மாத்திரைகள் கடத்தி வரப்பட்டு இங்கு விற்கப்பட்டது தெரியவந்தது.

இதையடுத்து தனிப்படையினர் ஈரோட்டிற்கு விரைந்து சென்று, அங்கு போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகளுடன் இருந்த முக்கிய ஏஜென்டான முகமது தாவீத் (21) மற்றும் அவரது கூட்டாளிகளான நிரஞ்சன் (20), கிரிதரன் (20) ஆகியோரை கையும் களவுமாகப் பிடித்தனர்.

இவர்களுடன் உள்ளூர் ஏஜென்ட்களான சகாயம் (21), சூரியகுமார் (22) என மொத்தம் 6 பேரை பரமத்தி வேலூர் போலீசார் கைது செய்து, சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

இவர்கள் ஒரு போதை மாத்திரையை 500 ரூபாய் வரை விற்று, அந்தப் பணத்தில் ஆடம்பரமாகச் செலவு செய்து வந்ததும், இந்த விவரம் இவர்களின் பெற்றோருக்குத் தெரியாது என்பதும் போலீஸ் விசாரணையில் வெளி வந்துள்ளது.

### திராவிட மாடல் ஆட்சியின் வல்லுநர் குழு பரிந்துரைகளைப் பெற்று

# ஆணவப் படுகொலையைத் தடுக்கக் கோரி தோழர் களம் சார்பில் கரூரில் ஆர்ப்பாட்டம்!

கரூர, ஜூலை 10-

திராவிட மாடல் ஆட்சியின் வல்லுநர் குழு பரிந்துரைகளை பெற்று ஆணவ படுகொலையைத் தடுக்க கோரி தோழர் களம் சார்பில் கரூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சிறப்பு சட்டம் இயற்றக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் முன்பு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் களம் கரூர் மாவட்ட செயலாளர் டைகர். ராஜீவ் காந்தி தலைமை வகித்தார். தலைமை நிலைய செயலாளர் தமிழன்.சு.கவின்குமார், மாநில அவைத்தலைவர் இரா.ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

தோழர் களம் அமைப்பின் நிறுவனர் & தலைவர் தோழர்.தி.க.சண்முகம் துவக்கவுரை ஆற்றினார். திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநில துணைப் பொதுச்செயலாளர் தனகா.சு.நாகராசன் அவர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைப்பாளர் முகிலன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்,

இந்நிகழ்வில் திராவிடர் கழகம் கரூர் மாவட்ட தலைவர் குமாரசாமி, தந்தை பெரியார் திராவிட கழக மாவட்ட தலைவர் கு.கி.தனபால், ஆதித்தமிழர் கட்சியின் மாவட்ட செயலாளர் முருகேசன், மக்கள் கலை இலக்கியக் கழக மாவட்ட செயலாளர் அரசப்பன், சாமானிய மக்கள் நலக் கட்சி சண்முகம் ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள்.

சமூக அரசியல் இயக்கங்களின் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், தொடர் பரப்புரைகள்தான் மக்களை அரசியல்படுத்தி சமூக இயங்கியலை நேர்படுத்திடும் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த வல்லன. இதை ஆட்சியாளர்கள், குறிப்பாக காவல்துறையினர் உணர்ந்து மக்கள் நலன் சார்ந்த பிரச்சனைகளை பொது தளத்தில் சட்டத்திற்குட்பட்டு இயங்கிட அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கையோடு,

ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்காகஜாதி ஆணவப் படுகொலைகளின் காரணங்களை ஆய்வு செய்தல். தனிச்சட்டம் இயற்றுவதற்கான பரிந்துரைகள் வழங்குதல்.

காவல்துறை, வருவாய்த் துறை, சமூகநலத்துறை உள்ளிட்ட அமைப்புகளுக்கான செயல்முறை வழிகாட்டுதல்களை பரிந்துரைத்தல் ஆகிய நோக்கங்களை முன்வைத்து, திராவிடமாடல் ஆட்சியின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 2025 அக்டோபர் 18 அன்று நீதியரசர் கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்த அரசு உடனடியாக முன்வரவேண்டும்.

ஜாதி மறுப்பு இணையர்களின் வாரிசுகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் கடனுதவிகள் ஆகியவற்றில் முன்னுரிமை வழங்கிட சிறப்பாக 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்கிற கோரிக்கைகளையும் முன்வைத்து முழக்கங்களை எழுப்பினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. அம்பிகா

**ஜூலை 10 (2017)**



**கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.**

**2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**